Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

Recd 19/4/18

அனுப்புநர்

திரு.தி.முருகன், பி.இ.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்,
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி-II,
திருவள்ளூர் - 602 001.
email-tvlrregion@gmail.com

பெறுநர்

ஆணையர்,
திருவள்ளூர் நகராட்சி,
திருவள்ளூர்.

ந.க.எண்.315/2017/திவம2, நாள்.19.04.2018.

அம்மையீர்,

பொருள் : மனைப்பிரிவு அனுமதி - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் / நகராட்சி / புங்கத்தூர் கிராமம் - சர்வே எண்கள்.549/1A,1B, 2A, 2B, 550pt, 552/4 - T.S.No.9/4A, 4B, 5pt, 11/3,4, 5, 12/7C, 13/2 & 18/2-ல், 9.52 ஏக்கர் பரப்பிலான மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது - மேல் நடவடிக்கைக்கு சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை :
1) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் எண்.5677/2017LA1, நாள்.03.10.2017.
2) மனுதாரர்கள் திரு.வெங்கடேஷ் மற்றும் ஆனந்த் ஆகியோரின் மனு, நாள்.23.03.2017.
3) ஆணையர், திருவள்ளூர் நகராட்சி அவர்களின் கடிதம் எண்.504/2017F1, நாள்.29.06.2017.

- - -

மேற்காண் பொருளில் கண்டுள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு, பார்வை 1-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதத்தில், மவ/நஊஇ எண்.29/2017 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட, வரைபடம் மற்றும் செயலாணை நகல் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி வரைபடம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினையும் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.

<u>இணைப்பு :</u>

வரைபட தொகுப்பு மற்றும் செயலாணை கடிதம் -2

<u>நகல் :</u>

1.தி/ள் வெங்கடேஷ் மற்றும் ஆனந்த்,
52/2, பசுல்லா சாலை, தி.நகர், சென்னை-600 017.

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம்.

திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை :- திரு.S.செந்தில் குமரன், M.A., PGDPM.,

ந.க.எண்.504/2017/எப்1,

நாள்.03.05.2018

பொருள் : மனைப்பிரிவு – திருவள்ளூர் நகராட்சி – புங்கத்தூர் கிராமம் – ச.எண்.549/1A, 1B,2A,2B, 550, 552/4–ல் 9.52 ஏக்கர் நில பரப்பு – மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள ஒப்புதல் அளித்தல் – சம்மந்தமாக.

பார்வை :
1. திரு.வெங்கடேசன் மற்றும் ஆனந்த் அவர்களின் மனு நாள்.20.02.2017.
2. உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண்.06.03.2017.
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.06.03.2017.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.315/2017/திவம2, நாள்.19.04.2018.

ஆணை :-

பார்வை 1–ல் கண்டுள்ள தங்களின் விண்ணப்பத்தின் பேரில், பார்வை 4–ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்கள் கடிதத்தில் திருவள்ளூர் நகரம், புங்கத்தூர் கிராமம், ச.எண்.549/1A, 1B,2A,2B, 550, 552/4–ல், நகரளவு எண்.9/4A,4B, 5pt,11/3,4,5, 12/7C, 13/2. 18/2–ல் 9.52 ஏக்கர் நிலப்பரப்பில் மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனுதரார் இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனை உட்பிரிவு கட்டணம் இந்நகராட்சி கருவூல ரசீது எண்.014/01/2/18–19/0000633, நாள்.02.05.2018 மூலம் செலுத்தியுள்ளதின் பேரிலும், மனுதாரர் மேற்படி திருவள்ளூர் நகரம், புங்கத்தூர் கிராமம், ச.எண்.549/1A, 1B,2A,2B, 550, 552/4–ல் உள்ள 9.52 ஏக்கர் நிலப்பரப்பில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் தெரிவித்த நிபந்தனைகளை 30 நாட்களுக்குள் பூர்த்தி செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள இதன் மூலம் உத்திரவு அளிக்கப்படுகிறது.

ஆணையர்,
திருவள்ளூர் நகராட்சி.

இணைப்பு : நிபந்தனை நகல்

பெறுநர் :
திரு.S.வெங்கடேசன் மற்றும் S.ஆனந்த்,
க.எண்.52/2, பசல்லா ரோடு,
தி.நகர், சென்னை–17

Received
6/10/17

பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்பு ஆணையர்,
நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்,
807, அண்ணா சாலை,
சென்னை-600 002.
www.tn.gov.in/tcp
email id:dtcp@vsnl.net

பெறுநர்
உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.
திருவள்ளூர்.

ந.க.எண்:5677/2017/எல்எ1, நாள்:03.10.2017

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் - திருவள்ளூர் நகராட்சி, புங்கத்தூர் கிராமம் - சர்வே எண்கள்:549/1A, 1B, 2A, 2B, 550பா. 552/4 - நகரளவை எண்கள்:9/4A, 4B, 5பா, 11/3,4, 5, 12/7C, 13/2 & 18/2, பிளாக் எண்:13, வார்டு எண்:B-ல் 9.52 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வரைபடம்- ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1) மனுதாரர், திரு.வெங்கடேஷ் மற்றும் ஆனந்த், சென்னை அவர்களின் விண்ணப்பம், நாள்:02.03.2017 மற்றும் 23.03.2017 மற்றும் 25.09.2017.
2) ஆணையர், திருவள்ளூர் நகராட்சி கடிதம் எண்:504/2017/எப்1, நாள்:29.06.2017.
3) மண்டல உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், கடிதம் எண்:315/2017 திவம 2, நாள்:23.03.2017, 18.04.2017.
4) இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்:20.05.2017 மற்றும் 20.09.2017
5) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்:14619/88பிசிசி, நாள்:27.04.1988.
6) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்:40483/90 எல்ஏ1, நாள்:07.11.1992.
7) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:7978/2012 எல்ஏ 2, நாள்:19.04. 2012.
8) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 13686/2017/எல்ஏ1, நாள்:08.09.2017.

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 4-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய கடிதம் நாள்:29.06.2017 சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

..2..

..2..

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ / ந.ஊ.இ.எண்.29/2017 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3) மேலும், பார்வை 5 மற்றும் 6 ஆகியவற்றில் கட்டியுள்ள இவ்வலுவலக சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) பார்வை 7-ல் சுட்டிய இவ்வலுவலக சுற்றறிக்கையின்படி பொது திறவிடங்கள் மற்றும் சாலைகள் தானபத்திரம் மூலம் பதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைத்துள்ளதன்படி மனைப்பிரிவு உரிமம் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

5)மனைப்பிரிவு நிபந்தனை எண்:15-ன்படி திறவிடம் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறந்தவெளி ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதின்படி ஆணையர், திருவள்ளூர் நகராட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் எனவும் மனைப்பிரிவு நிபந்தனை 18(இ), 18(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

6)மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் அனைத்தும் (Quality of Roads) உள்ளாட்சியின் தரத்திற்கேற்ப தார்சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து நகராட்சி ஆணையர் அலுவலரிடம் சான்று பெற்ற பின்னரே உத்தேச மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

7) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:18(ஈ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலை மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

9) செயலாணைக் கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை</u> :-

1) பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை, சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவில் தார் சாலைகளாக அமைத்தும், சாலைகளுக்கான இடம், பூங்கா, பொது திறவிடங்களுக்கான இடம் ஆகியவற்றை உள்ளாட்சி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதாக உள்ளாட்சியிடமிருந்து சான்று பெறப்பட்டதன் பேரில் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி அனுப்பப்படுகிறது. இதன் பின்னர் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், தார் சாலைகளாக அமைக்கப்பட்டுள்ளதையும்

இடநேராய்வின் மூலம் உறுதி செய்த பின்னரே மண்டல அலுவலகத்தால் இம்மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குவதை உள்ளாட்சிக்குத் தெரிவித்து வரைபடங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

<u>இணைப்பு</u>

வரைபடம் மற்றும் -
மனைப்பிரிவு நிபந்தனைகள் 4 நகல்கள்.

ஒம்/- பீலா ராஜேஷ்
நகர் ஊரமைப்பு ஆணையர்

<u>நகல்கள்</u> :-

1) ஆணையாளர்,
திருவள்ளூர் நகராட்சி - கடிதம் மற்றும் நிபந்தனை படிவம்

2) திரு.S.வெங்கடேஷ் மற்றும் S.ஆனந்த்,
எண்:52/2, பசல்லா ரோடு,
தி.நகர், சென்னை-600 002 - கடிதம் மட்டும்

3) இருப்பு கோப்பு - 1 வரைபடம் 1 நிபந்தனை படிவம்

4) கோப்பு - 1 வரைபடம் 1 நிபந்தனை படிவம்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

5.10.17

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

அ.மு.04.10.2017.

05.10.17



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate